Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 70 / 2024

DEPOSITION OF WITNESS : P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : அறிவழகன் | Father's Name/ Husband Name | : சுப்பிரமணி |
| Village | விஷ்வநாதபுரம், | Taluk | : உத்தமபாளையம் |
| Religion | : | Age | : 38 |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2024

(எதிரி ஆஜர் இல்லை. BNSS 355-ன்படி மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதல் விசாரணை**

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் லோயர்கேம் கிளையில் நடத்துநராக பணி செய்து வருகிறேன் . எதிரியை தெரியும். கடந்த 17.09.2023-ம் தேதி தேனி பேருந்து நிலையத்தில் இருந்து TN57 N 2491 என்ற பேருந்தை குமுளி - திருச்செந்தூருக்கு நான் நடத்துனராகவும் என்னுடன் ஓட்டுநராக சுப்பிரமணி என்பவரும் சென்றபோது அரப்படிதேவன்பட்டி அருகே அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத நபர் ஓட்டிநரரை என்னடா தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி அவரது கழுத்தின் பின்புறம் கைகளால் தாக்கினார். அப்போது பயணிகள் கூச்சலிட்டனர். பேருந்துக்குள் பின்புறத்தில் இருந்த நான் டிக்கெட் விநியோகம் செய்து கொண்டிருந்தேன் . வண்டி நிலைதடுமாறியது நான் முன்சென்றுபார்த்த எதிரியை ஏன் இவ்வாறு செய்கிறீர் என்று கேட்டபோது அவர் பேண்ட் பாக்கெட்டில் இருந்த மதுபாட்டிலை எடுத்து எனது வலது கையில் தாக்கினார் . அவரது கைகளால் எனது கழுத்தில் கீறி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் . க.விலக்கு பேருந்து நிறுத்தம் அருகே

வந்தபோது பயணிகளை மாற்றுபேருந்தில் ஏற்றி அனுப்பி வைத்துவிட்டு , கிளைமேலாளர் ரமேஷ் என்பவருக்கு தகவல் கொடுத்தேன் . பின்பு க.விலக்கு காவல்நிலையம் சென்று அரசுபணி செய்யவிடாமல் தடுத்த நபர் மீது நடவடிக்கை எடுக்கமாறு புகார் கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான் . **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** காயம்பட்ட நானும் ஓட்டுநரும் க.விலக்கு அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

**இல்லை**

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

sd/- T.பிச்சைராஜன்., B.Com., L.L.M

நீதித்துறை நடுவர்,

ஆண்டிபட்டி.

Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 70 / 2024**

DEPOSITION OF WITNESS : P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணியன் | Father's Name/ Husband Name | : பெரியகருப்பன் |
| Village | உச்சப்பட்டி | Taluk | : நிலக்கோட்டை |
| Religion | : | Age | : 46 |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2024

(எதிரி ஆஜர் இல்லை. BNSS 355-ன்படி மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதல் விசாரணை**

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் லோயர்கேம்ப் கிளையில் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன் . எதிரியை தெரியாது . அ.சா.1 என்னுடன் பணியில் இருந்த நடத்துனர் ஆவார் . கடந்த 17.09.2023-ம் தேதி தேனி பேருந்து நிலையத்தில் இருந்து TN57 N 2491 என்ற பேருந்தை குமுளி - திருச்செந்தூருக்கு நான் ஓட்டுநராகவும், அ.சா.1 நடத்துனராகவும் சென்றபோது அரப்படிதேவன்பட்டி அருகே குடிபோதையில் இருந்த 18 வயது மதிக்கத்தக்க ஒருநபர் முன்படிக்கட்டில் நின்றுகொண்டு வந்தார் நான் பேருந்தின் கதவை அடைக்க உள்ளே அழைத்தபோது அவர் உள்ள வந்து என்னை தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி எனது கழுத்தின் பின்புறம் கைகளால் தாக்கினார் . க.விலக்கு காவல்நிலையத்திற்கு பேருந்தை ஓட்டிச்சென்று நான் அங்கு நிறுத்திவிட்டேன் . அ.சா.1

இதுசம்மந்தமாக புகார் கொடுத்தார். புகாரில் நான் சாட்சி கையொப்பமிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

sd/- T.பிச்சைராஜன்., B.Com., L.L.M

நீதித்துறை நடுவர்,

ஆண்டிபட்டி.

Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 70 / 2024**

DEPOSITION OF WITNESS : P.W. 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ரமேஷ்** | Father’s Name/ Husband Name | : | **வீரணன்** |
| Village | | **கொடுவிலார்பட்டி** | Taluk | : | தேனி |
| Religion | : | | Age | : | 48 |
| Calling | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2024

(எதிரி ஆஜர் இல்லை. BNSS 355-ன்படி மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

<u>முதல் விசாரணை</u>

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் லோயர்கேம்ப் கிளைமேலாளராக பணி செய்து வருகிறேன் . அ.சா.1 எங்கள் கிளையில் நடத்துனர் ஆவார். அ.சா.2 ஓட்டுநர் ஆவார். கடந்த 17.09.2023-ம் தேதி தேனி பேருந்து நிலையத்தில் இருந்து TN57 N 2491 என்ற பேருந்தை குமுளி - திருச்செந்தூருக்கு அ .சா.2 ஓட்டுநராகவும், அ.சா.1 நடத்துனராகவும் சென்றபோது 03.00 மணியளவில் எனக்கு போன் செய்து அரப்படிதேவன்பட்டி அருகே குடிபோதையில் ஒருநபர் பேருந்துக்குள் ஓட்டுநரை கழுத்தின் பின்புறம் தாக்கி அசிங்கமாக வார்த்தைகளால் பேசியதாக தகவல் சொன்னார் . நடத்துனர் அந்த நபரிடம் கேட்டபோது எதிரி மதுபாட்டிலால் வலது கையில் தன்னை தாக்கியதாகவும் , உங்களுக்கு என்னை யார் என்று தெரியாது என்றும் ஆண்டிபட்டி பக்கம் வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று

மிரட்டியதாக என்னிடம் சொன்னார் நான் பயணிகளை மாற்று பேருந்தில் அனுப்பி வைத்துவிட்டு புகார் கொடுக்க சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான் . நடத்துனர் சொல்லித்தான் சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான்.

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

sd/- T.பிச்சைராஜன்., B.Com., L.L.M

நீதித்துறை நடுவர்,

ஆண்டிபட்டி.